

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்

திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்களின்

# உதிர்த்த முத்துக்கள்



## உழைப்பு உழைப்பு உழைப்பு

ஸ்டாலின் என்றால் உழைப்பு, உழைப்பு, உழைப்பு என்று உழைப்பின் சிகரமாக இருக்கக்கூடிய தலைவர் கலைஞர் அவர்கள் பாராட்டிச் சொன்னதைவிட எனக்கு வேறு ஏதேனும் பாராட்டு இருக்க முடியுமா.

நீ உன் அப்பாவைப் போலவே இருக்கிறாய் என்று பேரறிஞர் அண்ணா சொன்னதைவிட வேறு பாராட்டு எனக்கு இருக்கவே முடியாது.

இத்தகைய பாராட்டுக்களின் மூலமாக அடைந்த உற்சாகத்தால்தான் நான் உழைத்துக்கொண்டு இருக்கிறேன்.

இன்னும் உழைப்பேன்.
ஏன்? உயிர் இருக்கிற வரையில்
உழைத்துக் கொண்டே இருப்பேன்.



மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்

திரு. மு.க.ஸ்டாலின் அவர்களின்

# உதிர்த்த முத்துக்கள்

# தமிழரசு

தமிழ்நாடு அரசு

**செய்தித்துறையின் வெளியீடு**

ஆசிரியர் - வெளியிடுபவர்
**த. மோகன், இ.ஆ.ப.,**
இயக்குநர், செய்தி-மக்கள் தொடர்பு மற்றும் அலுவலால் அரசு இணைச் செயலாளர்

நிருவாக ஆசிரியர்
**இரா. அண்ணா**
இணை இயக்குநர் (வெளியீடுகள்)

முதன்மைப் பொறுப்பாசிரியர்
**அ. மகேஸ்வரி**
உதவி இயக்குநர்

பொறுப்பாசிரியர்கள்
**க.அ. முகம்மது ரசூல்**
**எஸ். உதயா கதிரவன்**
**ச. மஞ்சுளா**
செய்தி-மக்கள் தொடர்பு அலுவலர்கள்

உதவி ஆசிரியர்கள்
**மு. மணிமேகலை**
**கு. சுபாஷ்**
**இரா. பாலாஜி**
**மு. பரத்குமார்**

நிருபர்கள்
**எஸ்.ஆர்.எஸ்.ஸ்ரீந்தர்**
**ஜெ.ஜெயசிம்ஹன்**

ஓவியர்
**இரா. உமாமகேஸ்வரி**

இதழ் உதவியாளர்
**நி. ஷீலா**

கணினி வடிவமைப்பு
**தி. ஜெய்சங்கர்**
**க.இரா. உமாமகேஸ்வரி**

முதுநிலை அச்சுப்பிழைத் திருத்துபவர்
**கோ. சந்திரசேகர்**

தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
**தமிழரசு அலுவலகம்,**
எண்.5, இராஜீவ் காந்தி சாலை,
கானகம், தரமணி, சென்னை-600 113.
தொலைபேசி : 22542221/22542224
மின்னஞ்சல் : ddpub.tamilarasu@tn.gov.in
இணையதளம் : www.tndipr.gov.in

தமிழரசு இதழுக்கு
www.tamilarasu.org என்ற இணையதளத்தில்
சந்தா தொகையினை நேரடியாகச் செலுத்தலாம்.


திருவள்ளுவர் ஆண்டு 2054
சோபகிருது வருடம் : சித்திரை - வைகாசி
**மே 2023**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்களின்

# உதிர்த்த முத்துக்கள்

**சிறப்பு வெளியீடு**

**மக்களுக்காக
உழைப்பவர்கள்
நாங்கள்,**

**மக்களோடு
இருப்பவர்கள்
நாங்கள்,**

**மக்களுக்காகவே
வாழ்பவர்கள்
நாங்கள்.**

- மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள்

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள : tndiprnews DIPR TN tndipr TN DIPR www.dipr.tn.gov.in




## என் வாழ்நாள் கடமை

**ஊருக்கு உழைப்பதை,
உங்களுக்கு உழைப்பதை
என் வாழ்நாள் கடமையாகக் கருதி
உழைத்து வருகிறேன்.
அழுத்தமாகச் சொல்கிறேன்.
உறுதியாகச் சொல்கிறேன்.
நெஞ்சை நிமிர்த்திச் சொல்கிறேன்.
நான் வாழ்ந்த காலத்தில்
தமிழ்ச் சமுதாயத்தை வளமும்,
நலமும் பெற்ற சமுதாயமாக,
தமிழ்நாட்டை வளமும்,
நலமும் கொண்டிருக்கக்கூடிய
மாநிலமாக மாற்றிக் காட்டினேன் என்று
பெயரெடுப்பதற்காகவே
நான் உழைத்து வருகிறேன்.**

## மக்களோடு மக்களாக நான்

கோட்டையில் உட்கார்ந்து உத்தரவுபோடும் முதலமைச்சர் அல்ல நான். மக்களோடு மக்களாக இருந்து அவர்கள் சிந்தனைகளை உணர்ந்து அறிந்து செயல்படுத்திக்காட்டும் முதலமைச்சராகச் செயல்பட்டு வருகிறேன்.

மக்களோடு வாழ் என்று சொன்னார் பேரறிஞர் அண்ணா. அப்படித்தான் வாழ்ந்து வருகிறேன்.

மக்களின் நேற்றைய தேவையை இன்று நிறைவேற்றித்தருபவனாக இருக்கிறேன். நாளைய கோரிக்கையை இன்று உணர்பவனாக இருக்கிறேன்.

ஏனென்றால் நான் மக்களோடு மக்களாக இருக்கிறேன். உங்களுக்காகவே உழைக்கிறேன். உழைத்துக் கொண்டிருக்கிறேன். உங்களுக்கு உழைக்க காத்திருக்கிறேன்.

## உங்களில் ஒருவன்

என்றும் உங்களில் ஒருவன்தான் நான். முதலமைச்சர் நாற்காலியில் அமர்ந்திருப்பதால் மட்டும் நான் அல்ல. உங்கள் அனைவரது சேர்க்கையாக நான் அமர்ந்திருக்கிறேன். நாம் அனைவரும் சேர்ந்து நடத்தும் ஆட்சிதான் இது.
நமக்கான ஆட்சிதான் இது.





## மக்களால் வளர்க்கப்பட்டவன்

நான் மக்களோடு மக்களாக வளர்ந்தவன்.
மக்களால் வளர்க்கப்பட்டவன்.
மிகச் சிறுவயதில் இருந்தே,
பள்ளிப் பருவக் காலத்தில் இருந்தே,
அரசியலில் ஈடுபாடு கொண்டு,
என்னைப் பொதுவாழ்க்கையில்
ஒப்படைத்துக் கொண்டவன் நான்.
பொதுப்பணிகளுக்காக என்னை
ஒப்படைத்துக் கொண்டவன் நான்.

## திராவிட மாடல்

எல்லா அரசுக்கும் ஒரு நோக்கம்,
ஒரு பாதை இருக்கும்.
இந்த அரசுக்கும் ஒரு நோக்கம்,
ஒரு பாதை இருக்கிறது.
அதற்குத் திராவிட மாடல் என்று
நான் பெயர் சூட்டியிருக்கிறேன்.
சமூகத்தில் அடக்கி ஒடுக்கப்பட்டு இருக்கிறானே,
அவனை உயர்த்துவதுதான் எனது நோக்கம் என்றார்
தந்தை பெரியார் அவர்கள்.
நான் சாமானியர்களுக்காக உழைக்கும் சாமானியன்
என்றார் பேரறிஞர் பெருந்தகை அண்ணா அவர்கள்.
நான் அடக்கப்பட்ட மக்களின் உயர்வுக்காக
எந்நாளும் உழைப்பேன் என்றார் நம்முடைய
முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்கள்.
இந்த மூவரின் சிந்தனைகளையும் உள்ளத்தில் வைத்துச்
செயல்படுவதால்தான் இந்த ஆட்சியைத்
திராவிட மாடல் என்று கூறுகிறோம்.




## பொற்காலம்

‘எல்லோர்க்கும் எல்லாம் என்ற
திசை நோக்கிச் செல்லட்டும்
இந்த வையம்’ என்பதைப் போன்ற
பொற்காலத்தை உருவாக்க
உறுதி கொண்டுள்ளது
இந்த அரசு.

## அரசின் இலக்கு

அனைவருக்கும் உயர்கல்வி,
சமூக மேம்பாடு, தொழில்
வளர்ச்சி ஆகிய மூன்றும் ஒரே
நேரத்தில் சீராக வளரவேண்டும்
என்பதே எமது அரசின் இலக்கு
ஆகும்.



## நவீன மேம்பாடு

தந்தை பெரியார் விரும்பிய சமூகநீதி,
பேரறிஞர் அண்ணாவின் மாநில சுயாட்சி,
முத்தமிழறிஞர் கலைஞருடைய நவீன மேம்பாடு,
பெருந்தலைவர் காமராஜரின் கல்வி வளர்ச்சி,
தோழர் ஜீவா விரும்பிய சமத்துவ ஆட்சியைத்தான் அமைத்திருக்கிறோம்.

## கடமை தொடரும்

சொன்னதைச் செய்கிற ஆட்சிதான் கலைஞருடைய ஆட்சி.
கலைஞர் அப்படித்தான் நம்மை எல்லாம் உருவாக்கியிருக்கிறார்.
எனவே அவர்வழிநின்று என்னுடைய கடமை தொடரும்.

## தமிழகத்தின் வளர்ச்சி

தமிழகத்தின் வளர்ச்சி என்பது, சமூகத்தின் வாழ்க்கை வளர்ச்சியாக, சிந்தனை வளர்ச்சியாக, பண்பாட்டு வளர்ச்சியாக இருக்க வேண்டும். அதுதான் உண்மையான வளர்ச்சி. அத்தகைய வளர்ச்சிக்குப் பெயர் சூட்ட வேண்டுமானால் அதுதான் 'திராவிட மாடல்.'
பொருளாதாரம், கல்வி, சமூகம், சிந்தனை, செயல்பாடு ஆகிய ஐந்தும் ஒருசேர வளர வேண்டும். அதுதான் திராவிட மாடல் வளர்ச்சி.

## காந்தியச் சிந்தனை

சாதி, மத, இனம் குறித்த பல்வேறு சவால்களை எதிர்கொண்டிருக்கும் இந்தியத் திருநாட்டை வழிநடத்தக் கிடைத்த ஒப்பற்ற ஆயுதம் காந்தியச் சிந்தனைகள் என்னும் கருத்தை இளைஞர் மனதில் ஆழப்பதியவைக்க சூளுரைப்போம்.

## காந்திய அடிப்படைகள்

உண்மை, ஒழுக்கம், வாக்குத் தவறாமை அனைவருக்கும் சமமான நீதி, மதநல்லிணக்கம், வகுப்பு ஒற்றுமை, சிறுபான்மையினர் நலன், தனிநபருக்கான மதிப்பு, ஏழைகள் நலன், அகிம்சை, தீண்டாமை விலக்கு, அதிகாரக் குவியலை எதிர்த்தல், ஏகபோகத்துக்கு எதிர்ப்பு, சுதந்திரமான சிந்தனை, அனைவர் கருத்துக்கும் மதிப்பளித்தல், கிராம முன்னேற்றம் இவைதான் காந்தியத்தின் அடிப்படைகள்.

## முன்னுரிமை

விடுதலைப் போராட்டத்தில் கலந்து கொண்டு, நமது நாட்டின் விடுதலைக்காகப் பாடுபட்ட தியாகிகளுக்கும், அவர்தம் குடும்பத்தினருக்கும் உதவிகள் வழங்குவதில் தமிழ்நாடு அரசு எப்பொழுதும் முன்னுரிமை அளித்து வருகிறது.




தீண்டாமை ஒழிப்பு





## உலகின் மூத்த மொழி

தமிழ், உலகின் மூத்த மொழிகளில் ஒன்று! தமிழ், எந்த மொழியில் இருந்தும் கடன் வாங்கி உருவான கிளை மொழி அல்ல. தமிழில் இருந்துதான் ஏராளமான மொழிகள் உருவாகியுள்ளன.

## அறநெறி

ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காண்போம் என்பதுதான் எங்கள் அறநெறி. ஒன்றே குலம், ஒருவனே தேவன் என்பதுதான் எங்கள் அறநெறி. பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் என்பதுதான் எங்கள் அறநெறி. எப்பொருள் யார் யார் வாய்க் கேட்பினும், அப்பொருள் மெய்ப்பொருள் காண்பது அறிவு, என்பதுதான் எங்கள் அறநெறி. அத்தகைய அறநெறியைக் கொண்ட ஆட்சியை நாங்கள் நடத்தி வருகிறோம்.

## தமிழ்த் தொண்டர்

தமிழுக்குத் தொண்டு செய்தவர்கள் அவர்களது படைப்புகளின் மூலமாக வாழ்ந்து கொண்டு இருக்கிறார்கள். அவர்களது புத்தகங்களின் மூலமாக வாழ்ந்து கொண்டு இருக்கிறார்கள். அது மட்டுமல்ல, அவர்களைப்போலவே இருக்கும் தமிழ்த் தொண்டர்களாகவும் அவர்கள் வாழ்ந்து கொண்டு இருக்கிறார்கள்.



## இலக்கணம்

ஒவ்வொரு தனி மனிதருடைய தேவையையும் நிறைவேற்றியாக வேண்டும். அந்த வகையில்தான் அனைத்து மக்களிடமும் கோரிக்கை மனுக்களைப்பெற்று, அவற்றையும் நான் நிறைவேற்றிக் கொண்டு வந்திருக்கிறேன். இதுதான் நாம் இன்றைக்குக்குப் பெருமையோடு சொல்லிக் கொண்டிருக்கிறோமே, திராவிட மாடல் ஆட்சி இதுதான் இந்தத் திராவிட மாடல் ஆட்சியின் இலக்கணம்.

## விதை

இன்றைக்கு அனைத்துச் சமுதாய மக்களும் கல்வியிலும் வேலைவாய்ப்பிலும் முன்னேறி அதிகாரம் செலுத்தும் இடத்துக்கு வளர்ந்து வந்திருக்கிறார்கள் என்று சொன்னால், அதற்கு அடிப்படை, திராவிட இயக்கத்தை வலுவுடன் வழிநடத்தி, இந்த இனத்தின் அறிவையும் மானத்தையும் தட்டியெழுப்பிய தலைவர்களான தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, தலைவர் கலைஞர் அவர்களும் போட்ட விதைதான்.

## இனத்தின் ஆட்சி

இன்னார்தான் படிக்க வேண்டும், இன்னார் படிக்கக்கூடாது என்று சொல்லக்கூடிய ஒரு காலம் இருந்தது. அதனை மாற்றிய இயக்கம்தான் நம்முடைய திராவிட இயக்கம்! இது ஒரு கட்சியின் ஆட்சி அல்ல, இனத்தின் ஆட்சி.

## மனசாட்சி

என்னுடைய வெற்றிக்கு அடிப்படையாக நான் நினைப்பது, மக்களுக்காக உண்மையாக இருப்பதும், மனசாட்சிப்படிச் செயல்படுவதும்தான். இந்தப் பொறுப்புக்கு நான் வரக் காரணமானவர்களே மக்கள்தான். அந்த மக்களுக்கு உண்மையாக நான் இருக்கிறேன். அதற்காக நான் எந்நாளும் உழைக்கிறேன்.

## மக்கள் அரசு

சமூக நீதிக்காகவும், சமத்துவத்துக்காகவும் தன்னையே அர்ப்பணித்துக்கொண்ட நம்முடைய தமிழினத் தலைவர் கலைஞர் அவர்கள் எந்த மக்களுக்காகப் பாடுபட்டாரோ, அந்த மக்களின் அரசுதான் இன்று கோட்டையில் நடக்கிறது. அந்த மக்களுக்கான அரசையே தொடர்ந்து நடத்துவோம்.

# கல்வி

அனைவருக்கும் கல்வி என்ற நோக்கத்திற்காகத்தான் திராவிட இயக்கமே உருவானது. திராவிட இயக்கத்தின் அடிப்படை நோக்கமான சமூக நீதி என்பதே கல்வித் தேவைக்காக உருவாக்கப்பட்டதுதான். நீதிக்கட்சி காலம் தொட்டு இன்றுவரை கல்விக்கு முக்கியத்துவம் தரும் இயக்கமாக நம்முடைய திராவிட இயக்கம் செயல்பட்டு வருகிறது.

தொடக்கக் கல்வியை வெறும் கல்வியாக மட்டும் பார்க்க முடியாது. அது வாழ்க்கையின் வழிகாட்டியாக, தன்னம்பிக்கையின் தூண்டுகோலாக அமைந்திருக்கிறது. இந்தச் சமூகத்தின் திறவுகோலாக ஒவ்வொரு மனிதருக்கும் இருப்பது இந்தத் தொடக்கக் கல்வி.

# கல்விச்செல்வம்

அழியாத அறிவுச் செல்வமான கல்விச் செல்வம் அனைத்துத் தரப்பு மக்களையும் சென்றடைய வேண்டும் என்பதே இந்த அரசின் நோக்கமாகும். அரசுப் பள்ளியில் பயிலும் மாணவர்களும் உயர்கல்வி நிலையங்களுக்குள் நுழைய வேண்டும்.

# உண்மையான கல்வி

ஒருவரது கல்வி, அவருக்கு மட்டுமல்லாமல், அவரது குடும்பத்துக்கு மட்டுமல்லாமல், அவரைச் சுற்றி இருப்பவர்களுக்கும் நாட்டுக்கும் பயன்படுவதாக இருக்கவேண்டும். அதுதான் உண்மையான கல்வி.





Federation of Indian Publishers
undertaking an action, consider the costs
claim and gains it may bring about.
Afrikaans
uit om tot aksie oor te gaan, neem in ag
stes, wat jy daarmee wil bereik, en wat die
winste mag wees.
Artemis
Egypt




## முதல் முகவரி

தமிழ்நாடு என்பது பண்பாட்டின் முகவரியாக இருந்தது. அத்தகைய தமிழ்நாடு, முதலீட்டாளர்களின் முதல் முகவரியாக மாறவேண்டும் என்ற இலக்குடன் செயல்பட்டு வருகிறோம்.

## தொழில் வளர்ச்சி

தொழில் வளர்ச்சியின் மூலமாக, நாடும், மக்களும், சமூகமும் முன்னேறுகிறது. தொழிற்சாலைகளை ஒரு வர்த்தகமாகப் பார்க்காமல், வாழ்க்கையாகப் பார்த்து எங்களது செயல்பாடுகள் அமையும்.




## தொழில்துறையின் வளர்ச்சி

சமூக நீதி மாநிலமான தமிழ்நாடு, கூட்டாட்சித் தத்துவத்தை முன்னெடுக்கும் தமிழ்நாடு, சகோதரத்துவ மண்ணான இந்தத் தமிழ்நாடு இந்த வரிசையில் தொழில்துறையில் சிறந்த தமிழ்நாடாகவும் உயர வேண்டும்.

தொழில்துறையின் வளர்ச்சி என்பது அந்தந்த வட்டாரத்தின் சமூக வளர்ச்சியாக மாறிய தமிழ்நாடு. உன்னதத் தமிழ்நாடாக, மேன்மையான தமிழ்நாடாக உயர வேண்டும். தமிழ்நாட்டு அறிவாற்றலை முழுமையாகப் பயன்படுத்திக் கொள்ளும் தொழில் நிறுவனங்களும் வரவேண்டும். அந்தத் தொழில் நிறுவனங்களில் பணியாற்றும் தகுதி படைத்தவர்களாகத் தமிழ்நாட்டு இளைஞர்களும் உருவாக வேண்டும்.

## தொலைநோக்குப் பார்வை

ஒரு மாநிலத்துக்கு மிகப்பெரிய முன்னேற்றங்களையும் முதலீடுகளையும் கொண்டு வருவதில் தகவல் தொழில்நுட்பத்துறைதான் முன்னணி வகிக்கிறது. தேவையையும், தொலைநோக்குப் பார்வையையும், அதன் மூலமாக வளர்ச்சியையும், வேலைவாய்ப்பையும் அதிகரிக்க வேண்டும் என்பதுதான் என்னுடைய ஆசை.

## மக்கள் நலன் காக்கும் சட்டமன்றம்

ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்திலேயே
மகளிருக்கு வாக்குரிமை அளிக்கும் சட்டத்தை
முதன்முதலாக நிறைவேற்றிய பெருமை
சென்னை மாகாண சட்டமன்றத்திற்கு உண்டு.
மகளிருக்கு உள்ளாட்சிப் பதவிகளில் உரிய இட ஒதுக்கீடு,
பெண் குழந்தைகளைப் பாதுகாக்கச் சிறப்புத் திட்டம் என
மகளிர் நலன் காப்பதில் நாட்டிற்கே
முன்னோடித் திட்டங்களை உருவாக்கித் தந்த பெருமை
கொண்டது இந்தச் சட்டமன்றம்.



## பொறுப்பு

இது பதவி அல்ல பொறுப்பு.
மக்கள் தந்திருக்கக்கூடிய பொறுப்பு.
ஆக, அந்தப் பொறுப்பை உணர்ந்து,
நாங்கள் எங்களுடைய கடமையை,
உங்கள் ஒத்துழைப்போடு,
ஆதரவோடு ஆற்றிக் கொண்டு
இருக்கிறோம்.

## சட்டம் ஒழுங்கு

சட்டம் ஒழுங்கு சிறப்பாக
அமைந்தால்தான் தொழில்
சிறக்கும், முதலீடுகள் பெருகும்.
அச்சமற்று மனிதர்கள் தங்களது
உழைப்பைச் செலுத்துவார்கள்,
கல்வி மேன்மை அடையும்.
வேலைவாய்ப்புகள் பெருகும்.

## தமிழ்நாட்டு உரிமை

தமிழ்நாட்டின் காவிரி உரிமையை,
தமிழ்நாட்டு உழவர்களின் நலனை
இந்த அரசு நிச்சயம் பாதுகாக்கும்.
தமிழ்நாட்டு உரிமையில் நாம்
அனைவரும் ஒன்றுபட்டு நிற்போம்,
நிச்சயம் வெற்றிபெறுவோம்.



## மக்கள் மனம்

கோட்டையிலிருந்தாலும், மக்களின்
மனங்களில் வாழ்வதையே பெரும்
பேறாகக் கருதக்கூடியவன் நான்.
எனவே, உங்கள் அனைவரின்
ஆதரவோடு, என் இலக்கை நோக்கி
நான் நடைபோடுகிறேன்.
உங்கள் துணையோடு நிச்சயம்
நான் வெற்றி பெறுவேன்.

## கிராம இராஜ்யம்

ஒரு நல்ல ஜனநாயகம் என்றால்
அது கடைக்கோடி மனிதனின் குரலைக் கேட்பதாக
இருக்க வேண்டும் என்று மகாத்மா காந்தி
அவர்கள் குறிப்பிட்டுக் காட்டியிருக்கிறார்கள்.
கடைக்கோடி மனிதனின் குரலைக்
கேட்பதற்காகத்தான் நான் வந்திருக்கிறேன்.
இதுதான் காந்தியார் காண விரும்பிய
கிராம இராஜ்யம் என்பதை
நீங்கள் மறந்துவிடக்கூடாது.

## ஒரு கொள்கையின் அரசு

**இது எனது அரசல்ல, நமது அரசு என்று நான் சொல்லி இருக்கிறேன். இந்த அரசு ஒரு கட்சியின் அரசாக இல்லாமல், ஒரு கொள்கையின் அரசாக, ஓர் இனத்தின் அரசாக இருக்கும் என்றும் சொல்லி இருக்கிறோம்.**

## முழு முதல் இலக்கு

**தமிழகம் அனைத்துத் துறைகளிலும் தலைசிறந்த மாநிலமாக மாற வேண்டும் என்பதே எனது ஆட்சியின் முழு முதல் இலக்கு ஆகும்.**

## அரசியல் இலட்சியம்

**தெற்காசியாவிலேயே தொழில் புரிவதற்கு உகந்த மாநிலமாகத் தமிழ்நாட்டினை உயர்த்துவதே எங்களது அரசியல் இலட்சியம்.**

## முதல் இலக்கு

**புதிய முதலீடுகளைப் பெருமளவு ஈர்க்க வேண்டும் என்பதுதான் எங்களது முதல் இலக்கு. அதற்கு உலகத்தரம் வாய்ந்த உள் கட்டமைப்புகளை உருவாக்கத் திட்டமிட்டுள்ளோம்.**

## எங்களது இலக்கு

**அனைத்துத் துறையும் வளர வேண்டும், அனைத்துச் சமூகமும் மேம்பாடு அடைய வேண்டும், அனைத்துத் தொழில்களும் சிறக்க வேண்டும். அனைத்து மாவட்டங்களும் செழிக்க வேண்டும் என்பதுதான் எங்களது இலக்கு. இந்த இலக்கை அடைவதற்காக எங்களை நாங்களே ஒப்படைத்துக் கொண்டுள்ளோம்.**





## அறிவியல் தொழில்நுட்பத்தில் வேளாண்மை

உணவு உற்பத்தியில் தன்னிறைவு பெறுவதையும், விவசாயம் செய்யும் பரப்பை அதிகப்படுத்துவதிலும் இந்த அரசு உறுதியாக இருக்கிறது. வேளாண்மையை இலாபகரமான தொழிலாக உழவர்கள் கருதும் சூழலை உருவாக்க வேண்டும். அறிவியல் தொழில்நுட்பங்களை வேளாண்மையில் புகுத்த வேண்டும். அதே நேரத்தில் உரிய விலை அவர்களுக்குக் கிடைக்க வேண்டும்.

## மக்களைக் காக்க

உணவுப் பாதுகாப்பு என்பதில் விவசாய மக்களின் பாதுகாப்பும் உள்ளடங்கும். மண்ணைக் காக்க வேண்டுமானால், மண்ணைக் காக்கும் மக்களைக் காக்க வேண்டும்.

## ஏற்றுமதியில் ஏற்றம் காண்போம்

நமது பொருட்களை உலகம் முழுவதும் கொண்டு செல்வோம், உலக நாடுகளைத் தமிழகம் நோக்கி வர வைப்போம். ஏற்றுமதியில் ஏற்றம் காண்போம், முன்னேற்றப் பாதையிலேயே எப்போதும் நடப்போம்.

## சீர்தூக்கும் கோல்

இருப்பதை எப்படிப் பெருக்குவது, பெருக்கியதை எப்படி பகிர்ந்தளிப்பது, மாநிலத்தின் வளத்தையும், நலத்தையும் எப்படிப் பேணுவது, உயர்த்துவது என்பதை, ஆழ்ந்து, ஆராய்ந்து, சமன் செய்து சீர்தூக்கும் கோல்போல் செயலாற்றுவோம்.





## தொன்மையான மொழி

தமிழ் தொன்மையான மொழி என்பதைத் தமிழர்கள் சொல்லித்தான் தெரிய வேண்டிய அவசியமில்லை.
உலகம் முழுவதும் இருக்கும் மொழியியல் அறிஞர்கள், இனவியல் அறிஞர்கள் அதைத்தான் சொல்லிக்கொண்டு இருக்கிறார்கள்.
தொல்பொருள் ஆராய்ச்சியாளர்களால் ஏற்றுக் கொள்ளப்பட்ட மாபெரும் உண்மை இது.

## செம்மொழி

தமிழ் மொழிக்கு வளம் சேர்க்கும் முக்கியத்துவம் வாய்ந்த பல திட்டங்களை செம்மொழி நிறுவனம் மேற்கொண்டு வருகின்றது. செம்மொழி நிறுவனம் முன்வைத்துள்ள இலக்குகளை அடைய, தமிழ்நாடு அரசு எப்போதும் துணை நிற்கும்.

## எங்கும் – எதிலும் தமிழ்

எங்கும் தமிழ்! எதிலும் தமிழ்! என்று பேரறிஞர் அண்ணா காட்டிய பாதையில், முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்களின் தொலைநோக்குப் பார்வையோடு நடைபோடும் நமது அரசு, தமிழை ஆட்சிமொழியாகவும், வழக்காடு மொழியாகவும் மேலும் உயர்த்திட தொடர்ந்து குரல் கொடுக்கும்.

## தமிழன்

தமிழ் என்று சொல்வதால் மற்ற மொழிக்காரர்களுக்கு, நாம் எதிரிகள் அல்ல.
தமிழன் என்று சொல்வதால் மற்ற தேசிய இனத்தவர்களுக்கு நாம் எதிரிகள் அல்ல.





## நம்பிக்கை

மாணவச் செல்வங்களே!
பள்ளிப் பிள்ளைகளே!
கல்லூரி மாணவ மாணவியரே!
நீங்கள் அனைவரும்
உரக்கச் சொல்லிப் பாருங்கள்!
நான் முதல்வன்,
நான் முதல்வன்,
நான் முதல்வன்
என்று சொல்லிப்பாருங்கள்!
உங்களுக்குள் ஒரு சக்தி பிறக்கும்.
உங்களுக்குள் ஒரு நம்பிக்கை பிறக்கும்.
உங்களுக்கு ஒரு தைரியம் பிறக்கும்.

## ஆசிரியர்கள்

ஆசிரியர்கள் எப்போதும் மாணவர்களின் மரியாதைக்குரியவர்கள். படித்து முடித்து விட்டாலும் மாணவர்களுக்கு ஆசிரியர்கள் எப்போதும் ஆசிரியர்கள்தான்.

## ஒளிரும் மாணிக்கம்

நாம் பெற்றிருக்கிற வெற்றி
நமக்கானதல்ல,
சமூகத்திற்கானது
என்று சிந்தியுங்கள்.
எப்படியெல்லாம் பயிற்சியில் பெறுகிற
அறிவைக் களத்தில் பயன்படுத்தலாம்
என்று நீங்கள் வாழ்க்கையோடு
தொடர்புப்படுத்திப்பாருங்கள்.
அப்போதுதான் அந்தப் பயிற்சி
உங்களை மின்னும் வைரமாக,
ஒளிரும் மாணிக்கமாக,
மங்காத தங்கமாக,
மிளிரும் முத்துக்களாக
மாற்றி அமைக்கும்.



## ஆசிரியரின் உரிய கடமை

**மாணவ சமுதாயம் மாண்புடைய சமுதாயமாக ஒழுக்க நெறியிலிருந்து மாறுபடாத தன்மை உடையவர்களாக, உலகின் வழிகாட்டிகளாய் விளங்கச் செய்ய வேண்டியது ஒவ்வொரு ஆசிரியரின் கடமையாகும்.**

**ஆசிரியப் பணியை ஏற்றுக் கல்வி நிலையங்களிலே குழந்தைகளின் அறியாமை இருளைப் போக்கும் ஆசிரியர் பெருமக்கள் அனைவரும் பாராட்டுக்கு உரியவர்களே.**

**அனைவருக்கும் கல்வி, செயல்வழிக் கற்றல், படைப்பாற்றல் கல்வி, அனைவருக்கும் இடைநிலைக்கல்வி எனக் கல்வியின் இன்றியமையாமையை உணர்ந்து அரசால் செயல்படுத்தப்பட்டு வரும் பல்வேறு புதிய திட்டங்களைக் கல்வி நிலையங்களில் நடைமுறைப்படுத்தி வரும் ஆசிரியர்கள் அனைவருக்கும் வாழ்த்துக்கள்.**





## மக்கள் இயக்கம்

பேரிடர்களின் அபாயம் மற்றும் பாதிப்புகளைக் குறைப்பதற்கான முன்னெச்சரிக்கை மற்றும் தடுப்பு நடவடிக்கைகளைப் பொதுமக்களின் பங்களிப்புடன் மேற்கொள்ள வேண்டும். பாதிக்கப்படக் கூடிய பகுதிகளில் வசிக்கும் மக்களின் பேரிடர்களை எதிர்கொள்ளும் திறனை மேம்படுத்தி, ஒரு மக்கள் இயக்கமாகப் பேரிடர் மேலாண்மையின் செயல்பாடுகள் விரிவுபடுத்தப்பட வேண்டும்.

## அரசின் நோக்கம்

தமிழகத்தை அனைத்து வகையான பேரிடர்களையும் திறம்பட எதிர்கொள்ளும் மாநிலமாக மாற்றுவதே அரசின் நோக்கம்.

## உருவாக்கம்

பேரிடர் தடுப்புப்பணிகள் என்பது பேரிடர் காலங்களில் மக்களைக் காப்பது மட்டுமல்ல, அத்தகைய பேரிடர் ஏற்படாத சூழலை நாம் உருவாக்கிட வேண்டும்.







## உயர்வு

தான் வளர்கின்றபோது
சமூகம் வளர வேண்டும்,
சமூகத்தை உயர்த்துவதே தான்
உயர்வதற்கு வழிவகுக்கும் என்பதை
உணர வேண்டும்.

## மஞ்சப்பை

இயற்கையைக் காப்போம்,
இயற்கையோடு இணைந்து
இயைந்து காப்போம்.
இயற்கையைக் கெடுக்கும்
பிளாஸ்டிக்குக்கு
முற்றுப்புள்ளி வைப்போம்.
மஞ்சப்பை என்பதை யாரும்
அவமானமாகக் கருத
வேண்டிய அவசியமில்லை
சுற்றுச்சூழலைக் காப்பவரின்
அடையாளப் பைதான் இந்த
மஞ்சப்பை.

## பேரிடர்

இயற்கையை முறையாகக்
கையாண்டால் அது கொடை!
முறையாகக் கையாளவில்லை
என்று சொன்னால்,
அதுவே பேரிடராக மாறிவிடும்.

## பண்பாட்டின் அடையாளம்

தமிழ் குறிப்பிட்ட நாட்டு மக்கள் பேசும் மொழியாக மட்டுமல்ல, ஒரு பண்பாட்டின் அடையாளமாக இருக்கிறது. நம்முடைய தமிழ் மொழியானது, நிலத்துக்கு, மண்ணுக்கு, இயற்கைக்கு, மக்களுக்கு, பண்பாட்டுக்கு இலக்கணத்தை வகுத்திருக்கக்கூடிய மொழி!

## தமிழ் வளர்ச்சி

தமிழ் வளர்ச்சி என்பது அந்த மொழியின் பெருமையைப் பேசுவது மட்டுமல்ல, மொழியைப் பெருமைப்படுத்தும் படைப்பாளிகளைப் போற்ற வேண்டும்.



## புதுமை மொழி

பழமைக்குப் பழமையாய்,
புதுமைக்கு என்றும் புதுமையாய்
இருக்கக்கூடிய மொழி
நம்முடைய தமிழ் மொழி!

## இனிமையான தமிழ்

தமிழைப் பேசும்போது
இனிமையாக இருக்கிறது.
தமிழைக் கேட்கும்போது
இனிமையாக இருக்கிறது.
ஏன், ‘தமிழ்’ என்று சொல்லும்போது
இனிமையாக இருக்கிறது.



## தமிழ் மண்

பிறப்பால் உயர்வு தாழ்வு
இல்லை என்று, பிற்போக்குக்
கயமைத்தனங்களை
எதிர்க்கக்கூடிய வள்ளுவரின்
மண்தான், இந்தத் தமிழ் மண்.
நட்ட கல்லும் பேசுமா,
நாதன் உள்ளிருக்கையிலே
என்றும் முழங்கிய சித்தர்கள்
உலவிய மண் நம்முடைய
தமிழ் மண், இறைவன்
ஒருவன்தான், அவன் ஜோதி
வடிவானவன் என்று எடுத்துச்
சொல்லிய வள்ளலாரின் மண்,
இந்தத் தமிழ் மண்.

## மொழி

நம்மை நாடுகள் பிரிக்கின்றன,
நிலங்கள் பிரிக்கின்றன, ஆனாலும்
மொழி இணைக்கிறது. அந்த வல்லமை
தமிழ்மொழிக்கு உண்டு.


EVERY



## பிரதிநிதி

பாட்டாளிகள், தொழிலாளிகள், உழவர்கள், ஏழை, எளிய நடுத்தர மக்கள், பட்டியலினப் பழங்குடி மக்கள், சிறுபான்மையினர், பெண்கள், மாற்றுத்திறனாளிகள், திருநங்கைகள் என அனைவரின் பிரதிநிதியாகத்தான் நான் இந்த முதலமைச்சர் இருக்கையில் உட்கார்ந்திருக்கிறேன். ஆகவே அவர்களுக்கு நன்மைகள் செய்வதற்காகத்தான் நான் முதலமைச்சராகப் பொறுப்பேற்று இருக்கிறேன்.

## சாமானியர்களின் ஆட்சி

அனைத்தும் கிராமப்புற ஏழை, எளிய மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தக்கூடிய திட்டங்களாக நம்முடைய கழக அரசு அமைத்து வருகிறது. இது சாமானிய மக்களுக்காக நடத்தப்படுகிற ஆட்சி, சாமானியர்களின் ஆட்சி என்பதை யாரும் மறந்துவிட வேண்டாம்.

## ஏழை எளியவருக்கான அரசு

நமது அரசு மக்களுக்காகவே உள்ள அரசு, ஏழை எளியவருக்கான அரசு, நாம் எது செய்தாலும் அது அவர்களுக்குப் பயனளிப்பதாக இருக்க வேண்டும்.

## வாழ்வாதாரம்

குடிசைகளை மாற்றுவது மட்டுமல்ல, குடிசைகளில் வாழும் மக்களுடைய வாழ்வாதாரத்தையும் உயர்த்திட வேண்டும், அவர்களுடைய வாழ்க்கைத்தரத்தையும் உயர்த்திட வேண்டும்.








## ஒளிபெற வைத்த நம்பிக்கை

என்மீது நீங்கள் வைத்திருக்கும் நம்பிக்கை என்பது, தனிப்பட்ட என் மீதான நம்பிக்கை மட்டுமல்ல, ஒடுக்கப்பட்டிருந்த இந்தத் தமிழினம் ஒளிபெற, உதய சூரியன் என உதித்த, திராவிட முன்னேற்றக் கழகத்தின் மீது நீங்கள் வைத்திருக்கும் நம்பிக்கை. அந்த நம்பிக்கையைக் காப்பாற்ற என்றும் உங்களில் ஒருவனாக உழைப்பேன்.

## மனித உரிமைச் சமூகம்

அரசின் பொருளாதாரமும் தனிமனிதர்களின் பொருளாதாரமும் தன்னிறைவு பெற்றதாக மாற வேண்டும். நம்முடைய தமிழ்ச் சமூகமானது சிந்தனையால், பண்பாட்டால், நாகரிகத்தால் பழக்க வழக்கத்தால் உயர்வடைய வேண்டும். ஏற்றத்தாழ்வு அற்ற, உயர்வு தாழ்வு அற்ற ஒரு மனித உரிமைச் சமூகமாக நாம் மாற வேண்டும்.

## மொழியைக் காக்கும் கடமை

மொழி சிதைந்தால் இனம் சிதையும், இனம் சிதைந்தால் நம்முடைய பண்பாடு சிதைந்துவிடும், பண்பாடு சிதைந்தால் நம்முடைய அடையாளமே போய்விடும். அடையாளம் போய்விட்டால், தமிழர்கள் என்று சொல்லிக்கொள்ளும் தகுதியை நாம் இழந்து விடுவோம். தமிழர் என்ற தகுதியை இழந்தால் வாழ்ந்தும் பயனில்லை. எனவே, மொழியைக் காப்பதற்கான கடமை என்பது எங்களைப் போன்ற அரசியல் இயக்கங்களைப்போலவே எழுத்தாளர்களுக்கும் இருந்தாக வேண்டும்.

## என் வாழ்வின் இலட்சியம்

அனைத்து வளமும் நலமும் கொண்ட தமிழ்நாட்டை உருவாக்குவதும், அகில இந்தியா முழுமைக்கும் மாநில சுயாட்சி, சமூக நீதிக் கொள்கையை மலரச் செய்வதையும் நான் என்னுடைய வாழ்க்கையின் இலட்சியமாகக் கொண்டுள்ளேன்.

## சமத்துவப் பெருவிழா

இந்தியாவிலேயே முதன்முறையாக ஆதி திராவிடர்களுக்கு கான்கிரீட் கூரையிலான தொகுப்பு வீடுகள், இரட்டைக் குவளை முறை ஒழிப்பு, சமத்துவபுரங்கள், சமத்துவ மயானத்திற்கு ஊக்கத்தொகை, உள்ளாட்சித் தேர்தல்களை நடத்தவே முடியாமலிருந்த பாப்பாரப்பட்டி, கீரிப்பட்டி, நாட்டார் மங்கலம், கொட்டகச்சியேந்தல் ஆகிய இடங்களுக்கு உள்ளாட்சித் தேர்தலை நடத்தி, சமத்துவப் பெருவிழா போன்ற எண்ணற்றச் செயல்பாடுகளைச் செய்த ஆட்சி.

## மக்கள் நீதி

சமூக நீதியைக் காக்கும் உறுதியான போராட்டத்தை இந்த அரசு தொடர்ந்து நடத்தும்.
சமூக நீதியே மக்கள் நீதியாகும்.



## அரசியல் தத்துவம்

ஆட்சியியலின் இலக்கணம் என்று கம்பீராகச் சொல்லக்கூடிய ஆட்சி இந்த ஆட்சி. மாநிலச் சுயாட்சி, மதச்சார்பின்மை, சமூக நல்லிணக்கம், சமத்துவம் ஆகிய தத்துவங்களை அரசியலில் மட்டுமல்ல, ஆட்சியியலில் முன்னெடுக்க நிலைக்கக்கூடிய ஆட்சி இந்த ஆட்சி. அந்த நெறிமுறைகளை வென்றெடுக்க எந்நாளும் உழைக்கக்கூடிய ஆட்சிதான் இந்த ஆட்சி.

## மக்களுக்கான அரசு

மக்களுக்குப் பணியாற்றுகிற அரசாக, உங்களால் உருவாக்கித் தரப்பட்டிருக்கக்கூடிய அரசாக இந்த அரசு என்றைக்கும் இருக்கும்.

## சமூக நீதி

சமூக நீதி என்ற தத்துவமே பிள்ளைகளின் கல்விக்காகத்தான், இளைஞர்களின் வேலை வாய்ப்புக்காகத்தான் உருவாக்கப்பட்டது. இன்றைக்குச் சாமானியர்களைக் கை தூக்கிவிடும் சமூக நீதிக் கொள்கை எல்லா இடங்களிலும் செழித்து வரும் நிலையில், அந்த வாய்ப்பை மாணவ, மாணவியர் அனைவரும் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

## சரித்திரச் சான்று

பிற்படுத்தப்பட்டோர், பட்டியலினத்தவர், பழங்குடியினர் ஆகியோருக்குரிய இட ஒதுக்கீட்டினை உறுதிப்படுத்தியதும், காலத்தின் தேவைக்கேற்ப அளவு மாற்றம் பெற்றுத் தந்ததும், கடந்த அரை நூற்றாண்டுக்கால வரலாற்றிலே இருக்கக்கூடிய சரித்திரச் சான்றாகும்.





## மக்களைத்தேடி அரசு

அரசைத்தேடி மக்கள் வந்த காலம் இருந்தது, இப்போது அதை மாற்றி, மக்களைத்தேடி அரசு செல்லும் காலமாக இந்த ஆட்சி உருவாக்கி இருக்கிறது.

ஏழை, எளிய, விளிம்பு நிலை மக்களையும் அன்போடு அரவணைத்து அவர்களுக்கு அனைத்துமாக இருக்கும் அரசாக தி.மு.க. அரசு நிச்சயம் இருக்கும்.

## நமது அரசு

இது எனது அரசு அல்ல, நமது அரசு. உங்களுடைய விருப்பங்களோடு பல்வேறு திட்டங்களை நிறைவேற்றக் கூடிய அரசு. இந்த அரசு இருக்கவேண்டுமென்று நினைக்கிற வகையில், அதற்காக நாம் அனைவரும் பாடுபட வேண்டும்.



## நம்முடைய அரசு

தமிழகத்திலே நடைபெற்றுக் கொண்டிருக்கக்கூடிய அரசு உங்களால் உருவாக்கப்பட்டிருக்கக்கூடிய அரசு. நான் பலமுறை அடிக்கடி எடுத்துச் சொல்லிக் கொண்டிருப்பது, நான் எனது அரசு என்று சொல்லமாட்டேன் அல்லது எங்களுடைய அரசு என்று கூறமாட்டேன். இது நம்முடைய அரசு.

## உங்கள் அரசு

இந்த அரசு என்பது தனிப்பட்ட என்னுடைய அரசு அல்ல, உங்களுக்குப் பாடுபடக்கூடிய, பணியாற்றக்கூடிய அரசுதான் என்பதை நீங்கள் மறந்து விடாதீர்கள். இது உங்கள் அரசு, உங்கள் அரசுக்கு உரிமையோடு கோரிக்கை வையுங்கள், அதைச் செயல்படுத்துவதற்கான முயற்சியில் முழுமையாக ஈடுபட்டு, நிச்சயமாக நாங்கள் துணை நிற்போம், அது போன்று நீங்களும் துணை நிற்க வேண்டும்.


1914
VICTORY
1918
1939
VICTORY
1945
1971 1971



## தியாகம்

ஒருவர் இராணுவத்தில்
இருக்கிறார் என்றால்,
அவர் மட்டுமல்ல, அவருடைய
குடும்பமே இராணுவத்தில்
இருக்கிறது என்றுதான் அர்த்தம்.
இராணுவ வீரரின் குடும்பமானது,
அந்த வீரரை வேலைக்கு
அனுப்பவில்லை, தியாகத்திற்குத்
தயாராக இருக்கவேண்டும் என்று
அனுப்பிவைக்கிறது.

## தியாக வாழ்க்கை

இராணுவத்தில் பணியாற்றுவது
என்பதைப் பணியாற்றுவது என்று
சொல்ல முடியாது.
மக்களைக் காப்பதும்
அதன் மூலமாக நாட்டைக்
காப்பதுமான மாபெரும்
தியாக வாழ்க்கைக்கு
ஒப்படைத்துக் கொண்டவர்கள்தான்
இராணுவ வீரர்களாக
இருக்க முடியும்.

## மகத்தான கடமை

பெற்ற சுதந்திரத்தைப் பேணிக்காத்து,
நாட்டின் அத்தனைப் பகுதிகளையும் பத்திரப்படுத்தும்
உத்தமச் செயலைச் சமரசம் செய்துகொள்ளாமல்,
உயிரைத் துச்சமென மதித்து, சீருடைக்குள்
தங்கள் எண்ணச் சிறகுகளையெல்லாம் ஒடுக்கி,
ஆசைகளையெல்லாம் குறுக்கி,
பகைவர்களை விரட்டும் ஒப்பற்றச் செயலை
மேற்கொள்கின்ற படை வீரர்களின் குடும்பங்களுக்கும்
பாதுகாப்பான வாழ்க்கையை அமைத்துத் தருவது
நம் மகத்தானக் கடமை.

## தடைகளைத் தகர்த்து சாதனை

நீங்கள் அடையும் வெற்றியும்,
பெருமையும் உங்களுக்கானது
மட்டுமல்ல, தமிழ்நாடும், இந்தியாவும்
அடையக்கூடிய வெற்றி.
எனவே, உங்களது கடமையும் பெரிது,
உங்களுடைய பொறுப்பும் பெரிது.
அதை உணர்ந்து தடைகளைத்
தகர்த்து, சாதனை
படைத்திடுங்கள்.

## சாதனை

ஒரு தனி மனிதனின் வரலாற்றில்
வேண்டுமானால் ஓராண்டு என்பது
மிக நீண்டதாக இருக்கலாம்.
ஆனால், ஒரு நாட்டின், மாநிலத்தின்
வரலாற்றில் ஓராண்டு என்பது
ஒரு துளிதான். துளி போன்ற
இந்த ஓராண்டுக் காலத்தில்,
கடல் போன்ற விரிந்த
சாதனைகளைச்
செய்துள்ளோம்.



## நான் முதல்வன்

**தமிழ்நாட்டு மக்களுக்கு நான் முதல்வராக இருக்கலாம். ஆனால் நீங்கள் அனைவரும் ஒவ்வொரு துறையிலும் முதல்வனாக விளங்க வேண்டும் என்ற பரந்த உள்ளத்தோடு, பரந்த எண்ணத்தோடு தொடங்கப்பட்ட திட்டம்தான், நான் முதல்வன் என்கிற இந்தத் திட்டம்.**

**கல்வித் திறனில் முதல்வன், அறிவாற்றலில் முதல்வன், படைப்புத் திறனில் முதல்வன், பன்முக ஆற்றலின் முதல்வன், ஒருவரை மதிக்கத் தெரிந்தவன், சமத்துவமாக நடக்கத் தெரிந்தவன், அனைவரும் பின்பற்றும் பண்பாட்டு அடையாளம் கொண்டவன், அனைவரையும் வழிநடத்தும் தலைமைத்திறன் பெற்றவன் என்று தமிழ்நாட்டு இளைஞர்களை, மாணவர்களை உயர்த்தும் திட்டம்தான் இந்த 'நான் முதல்வன்' என்கிற திட்டம்.**

# நான் முதல்வன்

உலகை வெல்லும் இளைய தமிழகம்

## என்னுடைய கனவுத் திட்டம்

நான் மட்டும் முதல்வன் அல்ல,
அனைவரும், ஒவ்வொரு வகையிலும்
முதல்வனாக வரவேண்டும் என்ற
எண்ணத்தோடு உருவாக்கப்பட்ட திட்டம்தான்
இந்தத் திட்டம்.
இது என்னுடைய கனவுத்திட்டம்.
அந்தத் திட்டம், என் கண்ணுக்கு முன்னால்
மாபெரும் வளர்ச்சியை அடைந்து வருவதை
மகிழ்ச்சியுடன் பார்த்து, மனநிறைவுடையும்
உள்ளத்தோடுதான் நான் உங்கள் முன்னால்
நின்று கொண்டிருக்கிறேன்.

## அரசின் குறிக்கோள்

குழந்தைகள் எதிர்காலத் தூண்கள்
என்பதைக் கருத்திற்கொண்டு,
கிராமப்புறக் குழந்தைகள்,
நகர்ப்புறக் குழந்தைகள் என்ற
பாகுபாடின்றி, சமமான வாய்ப்புப்
பெற்று, ஒளிமயமான வாழ்வினைப்
பெற்றிட சிறந்த கல்வி, சமுதாய,
பொருளாதாரக் கட்டமைப்பை
உருவாக்குவதே இந்த அரசின்
குறிக்கோளாகும்.

## முதல்வன்

தமிழ்நாட்டு இளைஞர்களைக்
கல்வியில், அறிவில்,
ஆற்றலில், தனித்திறமைகளில்
தலைநிமிர்ந்து நிற்க வைக்கத்
தமிழ்நாடு அரசால் தொடங்கி
வைக்கப்பட்டிருக்கக்கூடிய
திட்டம்தான்
நான் முதல்வன் திட்டம்.

## சமூகநீதியின் அடிப்படைக் கொள்கை கல்வி

கல்வி என்பதுதான் யாராலும் திருட முடியாத,
பறிக்க முடியாத சொத்து, அதனால்தான்,
படிப்புக்கு மட்டும் எத்தகைய தடைக்கல்லும்
இருக்கக்கூடாது என்று நினைக்கிறோம்.
அதனால்தான் இன்றைய திராவிட மாடல்
தமிழ்நாடு அரசானது, கல்விக் கண்ணைத்
திறப்பதையே பெரும்பணியாகக் கொண்டு
செயல்பட்டு வருகிறது. திராவிட இயக்கத்தின்
முழுமுதல் கொள்கையான சமூகநீதிக்கு
அடிப்படை என்பதே கல்விதான்.




## எனது ஆசை

காவல்துறை என்றாலே குற்றங்களைத் தடுக்கும் துறையாக, தண்டனை வாங்கித்தரும் துறையாக மட்டும் அனைவரும் நினைக்கிறார்கள். காவல்துறை என்பது குற்றங்கள் நடக்காத வகையில் சூழ்நிலையை உருவாக்கித்தரும் துறையாக மாறவேண்டும் என்பது என்னுடைய ஆசை.

## சொல்லும் செயலும்

நான் ஆட்சிக்கு வந்தவுடன், தவறு செய்பவர்கள் யாராக இருந்தாலும், அவர்கள் தண்டிக்கப்படுவார்கள் என்பதைச் சொல்லால் மட்டுமல்ல, செயலாலும் தொடர்ந்து பலமுறை நான் செய்தும் காட்டியிருக்கிறேன்.



## தமிழ்நாடுதான் முதல் மாநிலம்

**ஒரு சிறந்த முதலமைச்சர், நம்பர் 1 முதலமைச்சர் என்று எனக்குப் பெயர் கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். அதில் உள்ளபடியே எனக்குப் பெருமை இல்லை. எல்லா மாநிலங்களையும் ஒப்பிட்டுப் பார்த்துத் தமிழ்நாடுதான் முதல் மாநிலம் என்று சொல்லக்கூடிய நிலை வரவேண்டும், வரப்போகிறது, வரும், அதற்கு நீங்களெல்லாம் துணை நிற்க வேண்டும்.**

## விருப்பம்

**காவல்துறை கண்காணிப்பு இல்லாமலேயே கட்டுப்பாட்டோடு நடந்து கொள்கிற மக்களாக நம் தமிழ்நாட்டு மக்கள் மாற வேண்டும் என்பதுதான் என்னுடைய விருப்பம்.**

## புதுமைப்பெண்

**நமது ஆட்சியினுடைய மையக் கருத்து என்பது இதுதான். அனைவருக்குமான வளர்ச்சியின் உள்ளடக்கம் என்பது எல்லார்க்கும் எல்லாம் என்பதே, அதனை மனதில் வைத்துத் தொடங்கப்பட்டதுதான் புதுமைப்பெண் திட்டம்.**

## திராவிட மாடல் ஆட்சியின் தனித்தன்மை

**பள்ளி, கல்லூரிகளில் நான் முதல்வன் திட்டம் மூலமாக மாணவ, மாணவியரைத் தனி ஆற்றல் கொண்டவர்களாக வளர்த்து வருகிறோம். இதுதான் புதிய தமிழ்நாடு. அறிவு சார் தமிழ்நாடு. வலிமை வாய்ந்த, வளம் நிறைந்த தமிழ்நாடு. தமிழ்நாட்டின் இந்த இளைய சக்தியை அறிவு சக்தியாக, ஆற்றல் மிக்க சக்தியாக மாற்றி அதனைத் தொழில் வளர்ச்சியோடு இணைக்கிறோம். மனித ஆற்றலின் மகத்தான சக்தியை அதிகப்படுத்துவதன் மூலமாக மாநில வளர்ச்சியை உயர்த்தி வருகிறோம். இதுதான் திராவிட மாடல் ஆட்சியினுடைய தனித்தன்மை.**



## பெண் கல்வி

பெண் கல்வி கற்பது என்பது, வேலைக்குப் போவது என்பதோடு மட்டுமல்ல, அதோடு முடிந்து விடுவது இல்லை, பெண்களுக்குத் தன்னம்பிக்கை அளிப்பதாக, தைரியத்தை வழங்குவதாகக் கல்வி அமைகிறது. எனவே, பெண் பிள்ளைகள் நிச்சயமாகப் படிக்க வேண்டும், பட்டங்களைப் பெற வேண்டும்.

## கனவை நனவாக்க...

இன்றைய இளைய சமுதாயமானது
படிப்பு, படிப்பு, படிப்பு எனப் படிப்பில் மட்டுமே
கவனம் செலுத்த வேண்டும்.
உயரிய இலட்சியங்களை அடைய கனவு காண வேண்டும்.
அந்தக் கனவை நினைவாக்க உழைக்க வேண்டும்.
அதில் வெற்றி பெற்று, நீங்கள் பெருமை அடைவதோடு,
உங்கள் பெற்றோரையும் பெருமைப்படுத்த வேண்டும்.





## இணைப்புப் பாலம்

உண்மையான பொழுதுபோக்கு என்பது நம்முடைய கலைகள்தான். அந்தக் கலைகள் பொழுதுபோக்காக மட்டுமல்லாமல், நம் மனதைப் பண்படுத்துவதாகவும் அது அமைந்திருக்கிறது. தமிழர்களாக நாம் ஒன்று சேருவதற்கு நம்முடைய கலைகள்தான் இணைப்புப் பாலங்களாக அமையும்.

## எனது ஆசை

மொழிதான் ஓர் இனத்தின் அடையாளம், மொழிதான் ஓர் இனத்தின் உயிர், மொழிதான் ஒரு மனிதரின் உணர்ச்சிக்கு உணவு, மொழிதான் ஒருவரின் சிந்தனைக்கு உரம், எனவே, தாய் மொழிப்பற்று என்பது தாய்மொழிப் படிப்பாக, தாய்மொழி அறிவாக மாற வேண்டும் என்பதே என்னுடைய ஆசை.




## அறிவு, அன்பு, சேவை

நான் கோடிக்கணக்கான தமிழ் மக்களின் வீட்டில் விளக்கு ஏற்ற வேண்டும் என்று விரும்புகிறேன். அதுவும் சாதாரண விளக்காக அல்ல, அது அறிவு விளக்குகளாக, அன்பு விளக்குகளாக, சேவை விளக்குகளாக மற்றவர்களுக்குப் பயன் தரும் விளக்குகளாக அமைய வேண்டும்.

## வானமே எல்லை

தவழும் குழந்தை தவறி விழுந்தால்,
தாங்கிப் பிடிக்கும் தாயின் கரங்கள்.
அதே குழந்தை வளர்ந்து வெற்றிக்
கொடி நாட்டும்போது, தாயின் கண்கள்
வானமே எல்லை
என்று சுட்டிக்காட்டும்.

## வறுமை ஒழிப்பு

வறுமையை முழுவதுமாக ஒழிக்க வேண்டும், தமிழ்நாட்டில் பசி என்பதே இல்லை என்ற நிலையை உருவாக்க வேண்டும். வறுமையே இல்லாத மாநிலங்களின் பட்டியலில் தமிழ்நாடு முதலாவதாக இருக்க வேண்டும். அதுதான் நமக்குப் பெருமை.

## அறிவு

சாதி, மதம், பணம், அதிகாரம், வயது, அனுபவம், குடும்பம், பதவி, நாடுகள், வளர்ச்சி ஆகிய அனைத்தின் தன்மையும், ஆளுக்கு ஆள், நேரத்துக்கு நேரம், நாட்டுக்கு நாடு வேறுபடுகிறது. ஆனால், அறிவு மட்டும்தான் அனைத்தையும் கடந்து ஒரே அளவுகோலோடு அளவிடப்படுகிறது.







## கல்வி

கல்வி மட்டும்தான் நம் வாழ்க்கைத்
தரத்தை முன்னேற்றும்.
கல்வி மட்டும்தான் நமக்கு மதிப்பைத்
தேடித் தரும். கல்வியால் பெறக்கூடிய
பெருமை மட்டும்தான் எதனாலும்
அழிக்க முடியாது.

படிக்காமல் சாதித்த ஒருவரை
யாராவது எடுத்துக்காட்டாகக்
காட்டினால், அதற்கு இணையாகப்
படித்துச் சாதித்தவர்கள் இலட்சம்
பேரை நாம் காட்ட முடியும்.

படிக்காமலே சாதிக்கலாம்
என்று யாராவது சொன்னால்
அது தன்னம்பிக்கை ஊட்டுவது
அல்ல, அது வெறும் ஆசை
வார்த்தை. இவர்களெல்லாம்
படித்து முன்னேறுகிறார்களே என்ற
எரிச்சலில் தவறான பாதையைக்
கை காட்டும் சூழ்ச்சி அது.



## டீம் ஸ்பிரிட்

விளையாட்டுப் போட்டிகளில் முக்கியமாக இருக்க வேண்டிய ஒன்று என்னவென்றால், டீம் ஸ்பிரிட். இதுதான் மிக மிக முக்கியமான ஒன்றாக விளங்குகிறது.




## தனித்திறமை

ஒவ்வொரு வீரரும் தனித்தனி திறமை கொண்டவர்களாக இருந்தாலும், அந்த வீரர்கள் எல்லோரும் ஓர் அணி என்ற உணர்வுடன் களத்தில் செயல்படுகின்ற நேரத்தில்தான் அது முழு வெற்றியைப் பெற்றிட முடியும்.



## முழுமையான வெற்றி

தனித்தனித் திறமை கொண்ட வீரர்கள் ஒருங்கிணைந்து செயல்படும்போதுதான், ஒரு அணி தனது முந்தைய தோல்விகளில் இருந்து மீண்டு எழும், முழுமையான வெற்றி கிடைக்கும்.

## ஊக்கமளிக்கும் அரசு

ஒரு நல்ல அரசு, எல்லாத் துறைகளையும் சார்ந்த மக்களையும் பாதுகாக்கும். எல்லா விளையாட்டுகளுக்கும் ஊக்கமளிக்கும். விளையாட்டு வீரர்களை ஊக்கப்படுத்துவதுடன், சர்வதேசப் போட்டிகளில் அவர்கள் பதக்கங்களை வென்று நாட்டுக்குப் பெருமை சேர்க்கும் வகையிலான பயிற்சிகள் அளிப்பதற்கேற்ற களங்களை உருவாக்கித் தருவதிலும் நமது அரசு முனைப்பாகச் செயலாற்றுகிறது.

## விளையாட்டு

வாழ்க்கையே ஒரு விளையாட்டு என்று சொல்வார்கள். அரசியலை விளையாட்டாக நினைப்பவர்களும் நம் நாட்டிலே இருக்கிறார்கள். ஆனால், விளையாட்டுத்துறையை விளையாட்டாக நினைத்துவிடக்கூடாது. அதை விளையாட்டாக நினைத்தால் விளையாட்டாகப் போய்விடும்.

## வலிமை

விளையாடுபவர்களை விளையாட்டுக்காரர்கள் என்று சொல்வதில்லை, அவர்களை 'விளையாட்டு வீரர்கள்' என்றுதான் சொல்கிறோம். இந்த வீரர்களால், வீராங்கனைகளால் நாட்டுக்குப் பெருமை. நாளைய தலைமுறைக்கு ஒரு வலிமை.

## சுறுசுறுப்பு

மனநலன், உடல் நலன் ஆகிய இரண்டும் சரியாக இருந்தால் அனைத்து நலன்களும் சிறப்பாக இருக்கும். எப்போதும் நீங்கள் சுறுசுறுப்பாக இருக்க வேண்டும். சோர்வாக இருக்கக் கூடாது. சோம்பேறித்தனம்தான் வளர்ச்சிக்கு மிகப்பெரிய தடை.

## பயிற்சி

ஒருவர் விளையாட்டுப் போட்டியில் தீவிரமாகப் பங்கேற்கிறார் என்று சொன்னால், அவரது உடல்திறன் வலுவாக இருப்பது மட்டுமல்ல, மனதிடமும் உறுதி குலையாமல் இருக்க வேண்டும். இலக்கை நோக்கிப் பயணிப்பதில் எத்தனை இடையூறுகள் வந்தாலும் அதனைச் சவாலாக எதிர்கொண்டு, சமாளிக்கத் தெரிய வேண்டும், அதற்கான பயிற்சிகளை எடுக்க வேண்டும்.




## வெற்றிக்கான தொடக்கம்

முடியுமா நம்மால் என்பது தோல்விக்கு முன்பு வரும் தயக்கம், முடித்தே தீருவோம் என்பது வெற்றிக்கானத் தொடக்கம் என்பதை நமக்குக் கலைஞர் கற்றுத் தந்திருக்கிறார். அத்தகைய வெற்றியை எந்நாளும் பெறுவோம்.




## வெற்றி சூத்திரம்

அனைவருக்குமான வளர்ச்சி, அனைத்துத்துறை வளர்ச்சி, அனைத்து மாவட்ட வளர்ச்சி, அனைத்து மக்களின் வளர்ச்சி இதுதான் திராவிட மாடல் ஆட்சி, அதைத்தான் இன்றைக்கு நாம் நடத்திக் கொண்டிருக்கிறோம். இந்தத் திராவிட மாடல் ஆட்சி என்பது தமிழ்நாட்டுக்கு மட்டுமல்ல, இந்தியா முழுமைக்குமான வெற்றிச் சூத்திரமாக அமைந்துள்ளது. எப்போதுமே இந்தியாவுக்கு வழிகாட்டும் மாநிலமாகத் தமிழ்நாடுதான் இருந்திருக்கிறது.



## நவீனத் தமிழ்நாடு

நம்முடைய தலைவர் கலைஞர் அவர்கள் உருவாக்கிய திட்டங்களால் உருவானதுதான் இந்த நவீனத் தமிழ்நாடு. இன்றைக்கு நாம் பார்க்கிறோமே இந்தத் தமிழ்நாடு, நவீனத் தமிழ்நாடாகப் பார்க்கிறோமே, இது தலைவர் கலைஞர் அவர்களால் உருவாக்கப்பட்ட தமிழ்நாடு.

## அரசின் இலட்சியம்

அனைவருக்கும் ஏதோ ஒரு வேலை
அல்ல, அனைவருக்கும் அவரவர்
படிப்புக்கு ஏற்ற, தகுதிக்கு ஏற்ற வேலை
வழங்கப்பட்டாக வேண்டும்.
அதுதான் இந்த அரசினுடைய இலட்சியம்.
இந்த அரசினுடைய இலக்கு.

## வேலைவாய்ப்புத் திறன்

வேலை பெற்றவர்கள் தங்கள்
திறமைகளை வளர்த்துக் கொண்டு
மேலும் முன்னேற வேண்டும்.
வேலையைப்பெற முடியாதவர்கள்
சோர்ந்து போகாமல், கவலைப்படாமல்
நீங்கள் அயர்ந்து அதில் உங்கள்
கவனத்தைச் செலுத்த விடாமல்,
வேலைவாய்ப்புத் திறன்களை
நீங்கள் வளர்த்துக் கொண்டு,
அடுத்தக் கட்டத்தை நோக்கிச் செல்லத்
தயாராக இருக்க வேண்டும்.

## வளர்ச்சிக்குரிய மாநிலம்

ஒரு மாநிலத்தில் ஏராளமான
முதலீடுகள் பல்வேறு நிறுவனங்களால்
செய்யப்படுகிறது என்றால் அந்த
மாநிலத்தில் நல்லாட்சி நடக்கிறது
என்று பொருள். அந்த மாநிலத்தில்
அமைதி நிலவுகிறது என்று பொருள்.
அந்த மாநிலத்தில் சட்டம் ஒழுங்கு சீராக
இருக்கிறது என்று பொருள்.
அந்த மாநிலம் வளர்ச்சிக்குரிய
மாநிலமாக இருக்கிறது என்று பொருள்.
அந்த மாநிலத்தில் புதிய நிறுவனத்தைத்
தொடங்கினால் அந்த நிறுவனம்
வளரும் என்று பொருள்.

## ஒளிமயமான எதிர்காலம்

இந்த ஆட்சியானது
கடந்த பத்தாண்டுக் காலமாக,
தமிழ்நாட்டில் ஏற்பட்டுள்ள சரிவைச்
சீர் செய்து கொண்டிருக்கிறது.
பள்ளத்தை நிரப்பி வருகிறது.
துன்பங்களைப் போக்கி வருகிறது.
தொய்வைத் துடைத்து விடுகிறது.
அதே சமயத்தில் ஒளிமயமான
எதிர்காலத்தை உருவாக்க
எந்நாளும் உழைத்து வருகிறது.
மீண்டும் சொல்கிறேன்,
நேற்றைக்கும் சொன்னேன்,
என் சக்தியை மீறியும்
உங்களுக்காக உழைப்பேன்.

## நல்லாட்சி

முதலீடு என்பது வெறும் தொழில்
சார்ந்தது மட்டுமல்ல, அது வளர்ச்சியைச்
சார்ந்தது. அது நல்லாட்சியின்
அடையாளம் ஆகும். அத்தகையப் பெயரை
ஆட்சிக்கு வந்த ஆறுமாத காலத்தில்
பெற்றிருக்கிறோம்.

## நம்முடைய இலக்கு

நான் மட்டுமல்ல, நீங்கள் ஒவ்வொருவரும்
ஐ டோண்ட் கேர் என்று சொல்லி
நகர வேண்டும். அப்படி பொய்களை
அநாதைகளாக விட்டு, உண்மை எனும்
வெளிச்சத்தைத் துணையாகக் கொண்டு
நடந்தாலே, நாம் முன்னேறலாம்,
நம்முடைய இலக்குகளை அடையலாம்.





## தன்மானம்

மகளிர் சுயஉதவிக்குழு எதற்காகத் தொடங்கப்பட்டதென்றால், பெண்கள் யாருடைய தயவையும் எதிர்பார்க்காமல் அவர்களுடைய சொந்தக்காலில் நிற்க வேண்டும், தன்மானத்துடன் வாழவேண்டும், சுயமரியாதையோடு வாழ வேண்டும், யாரையும் எதிர்பார்க்காமல் அவர்கள் வாழ்க்கையை நடத்த வேண்டும் என்பதற்காகத்தான் தொடங்கப்பட்டது.

## உறுதிமொழி

வாக்களித்தவர்கள் இவர்களுக்கு ஓட்டு போட்டோமே என்று மகிழ்ச்சி அடைய வேண்டும். அதேபோல வாக்களிக்கத் தவறியவர்கள், அய்யோ இவர்களுக்கு வாக்களிக்காமல் விட்டுவிட்டோமே என்று கவலைப்பட வேண்டும். அப்படி நம்முடைய பணி இருக்கும் என்று உறுதிமொழி சொல்லி அந்தப் பதவியை நாங்கள் ஏற்றுக் கொண்டோம்.




## கொள்கை

சமூக நீதி, சுயமரியாதை, மனிதநேயம், சமத்துவம் கொண்டவர்களாக நமது மாணவச் செல்வங்கள் வளர வேண்டும். அனைவருக்கும் கல்வி, அனைவருக்கும் வேலைவாய்ப்பு என்பது திராவிட இயக்கத்தினுடைய அடிப்படையான கொள்கைகளில் ஒன்று.

## வாழ்க்கையின் அடுத்தக்கட்டம்

பள்ளிக் காலத்திலிருந்து கல்லூரிக் காலத்துக்குள் நுழைகிறீர்கள். உங்கள் வாழ்க்கையின் அடுத்த கட்டத்துக்குச் செல்கிறீர்கள். சிறந்த வேலைவாய்ப்பை நீங்கள் பெற வேண்டும். வேலை தேடுபவர்களாக மட்டுமல்ல, வேலை கொடுப்பவர்களாகவும் உயரவேண்டும்.






ஆதி திராவிடர் நல ஆரம்பப் பள்ளி
அலமேலுமங்காபுரம், வேலூர் புறநகர்
வேலூர் மாவட்டம்
அனைவரும் உயர்வோம்
அனைவரும் கற்போம்

## அன்பு

எல்லா மதங்களும் அன்பைத்தான் போதிக்கின்றன. ஒருவர் மற்றவர்களுடன் அன்பாக இருங்கள் என்பதுதான் அனைத்து மதங்களின் சாராம்சமாக இருக்கிறது. அத்தகைய எண்ணங்களை நாமும் ஆதரிக்கிறோம். அதனை நாம் விமர்சிப்பது இல்லை.
அன்பு என்பது சாதி பார்க்காது, மதம் பார்க்காது, மொழி பார்க்காது, இனம் பார்க்காது, நிறம் பார்க்காது, பால் பேதம் பார்க்காது. இத்தகைய அன்பை அடிப்படையாகக் கொண்ட எதுவும், யாரும் ஏற்கத்தக்கவர்கள். இதில் பேதம் பார்க்கும் யாரும் ஒதுக்கப்பட வேண்டியவர்கள். அன்பு ஒன்றுதான் வாழ்க்கையின் சட்டம். அத்தகைய சட்டப்படிதான் இந்த அரசு செயல்படும்.

## சிறந்த சிற்பிகள்

நாளைய நவீன உலகை உருவாக்கும் சிறந்த சிற்பிகள் நம் குழந்தைச் செல்வங்கள். ஆற்றல்மிக்க அவர்களது திறமைகளைக் கண்டறிந்து அத்திறமைகளை மேம்படுத்தி, அவர்களின் உரிமைகளைப் பாதுகாத்து, அவர்களைக் கருத்தோடு பராமரிக்க வேண்டியது தமிழ்நாட்டு மக்களின் கடமையாகும்.

## சீரான வளர்ச்சி

அனைவருக்கும் உயர்கல்வி, சமூக மேம்பாடு, தொழில் வளர்ச்சி ஆகிய மூன்றும் ஒரே நேரத்தில் சீராக வளர வேண்டும் என்பதே எமது அரசின் இலக்கு ஆகும். மூன்றும் ஒன்றாக வளர்வதுதான் சீரான வளர்ச்சி.

## அரசின் குறிக்கோள்

குழந்தை தொழிலாளர்முறை என்ற கொடுமையான வன்முறையிலிருந்து விடுவித்து, அவர்களுக்கு இனிமையான குழந்தைப் பருவத்தினையும், முறையான கல்வியினையும் உறுதி செய்வதே தமிழக அரசின் குறிக்கோளாகும்.

## இலட்சியம்

அனைவருக்கும் கல்வி, அனைவருக்கும் உயர்கல்வி என்பதே இந்தத் திராவிட மாடல் அரசினுடைய இலட்சியமாக, கடைமையாக அமைந்திருக்கிறது.



## இந்திய ஆட்சிப்பணி

அரசுப்பணி என்பது தமிழ்நாட்டு இளைஞர்களுக்கு விருப்பமாக இருக்கக்கூடிய பணி. அதிலும் குறிப்பாக இந்திய ஆட்சிப் பணி என்பது எண்ணற்ற இளைஞர்களின் கனவாக இருக்கக்கூடிய நிலை.




## கடமை உணர்வு

இந்திய ஆட்சிப் பணியில் வந்தவுடன் நாம் எந்தச் சிற்றூரிலிருந்து வந்தோம் என்பதை மறந்துவிடக் கூடாது. நாம் அதிகார வர்க்கத்தைச் சேர்ந்தவர்கள் என்று ஒருபோதும் சிந்திக்கக் கூடாது. அரசு வசதிகளை எவ்வாறு துய்க்கலாம் என்று மனக்கணக்கு போடக்கூடாது. நீங்கள் நேர்மையாகவும், தூய்மையாகவும் பணியாற்ற வேண்டிய கடமை உணர்வோடு ஒவ்வொரு நொடியும் திகழ வேண்டும்.




## நல்ல நிருவாகம்

இந்திய ஆட்சிப் பணியிலோ, மற்ற குடிமைப் பணியிலோ நீங்கள் பணியாற்றும்போது மக்களை நேசிப்பது மிகவும் முக்கியம். அவர்களுக்காகத்தான் நாம் பணியாற்றுகிறோம் என்கிற எண்ணம் உங்களுக்கு எப்போதும் இருக்க வேண்டும். பிரச்சினைகளைக் கண்டு ஓடி ஒளியாமல் அவை கிளம்பும் இடத்தைத் தேடிக் கண்டுபிடித்துத் தீர்த்து வைப்பதுதான் நல்ல நிருவாகத்திற்கு அழகு.

## நம்பர் 1 முதலமைச்சர்

இன்றைக்கு நம்பர் 1 முதலமைச்சராக என் பெயரை அறிவித்திருக்கிறார்கள். இது எனக்குக் கிடைத்த பெருமை மட்டுமல்ல, எங்களுடைய அமைச்சரவைக்குக் கிடைத்த பெருமை மட்டுமல்ல, இந்த அரசுக்குக் கிடைத்த பெருமை மட்டுமல்ல, தமிழ்நாட்டில் இருக்கக்கூடிய மக்கள் ஒவ்வொருவருக்கும் கிடைத்திருக்கக்கூடிய பெருமையாகத்தான் நான் கருதுகிறேன்.

## நாட்டை வளர்க்கும் ஆட்சி

எல்லோர்க்கும் எல்லாம் என்ற திசை நோக்கி இந்த நாட்டை வளர்க்கும் ஆட்சியாக திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிசெயல்பட்டு வருகிறது. ஏழை, எளிய, விளிம்பு நிலை மக்களின் உயர்வுக்காகவும், பட்டியலின, பழங்குடியின, பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட மக்களுடைய மேன்மைக்காகவும் எத்தனையோ திட்டங்களை இந்த ஆட்சி செயல்படுத்திக் கொண்டிருக்கிறது.

## தட்டாமல் கதவு திறக்கும்

தட்டுங்கள் திறக்கப்படும் என்பார்கள், தட்டாமலேயே தமிழ்நாடு அரசின் கதவுகள் திறக்கும் என்ற உறுதியை உங்களுக்கு நான் வழங்குகிறேன்.

## கடமை

மக்கள் ஆதரவு பெருகப்பெருக பொறுப்பும், கடமையும் கூடுகிறது. எதிர்ப்பு அதிகம் ஆகிறது. அதனைக் காப்பாற்ற நாம் கடினமாக உழைத்தாக வேண்டும், உழைக்க வேண்டும். அதிகமாக உழைக்க நான் தயாராக இருக்கிறேன்.

## அறநிலையத்துறையின் பொற்காலம்

ஏராளமான கோயில் திருப்பணிகள் நடக்க இருக்கிறது. புதிய தேர்கள் வலம்வரப்போகின்றன. திருக்கோயில் கல்லூரிகள் தொடங்கப்பட உள்ளன. அர்ச்சகர்கள், கோயில் பணியாளர்களுக்குக் குடியிருப்புகள் கட்டித்தரப்பட உள்ளன. இவை அனைத்தும் செய்து முடிக்கப்பட்டால் அறநிலையத்துறையின் பொற்காலம் இன்னும் சில மாதங்களில் உருவாகப் போகிறது. அந்தக் காட்சியை நாம் எல்லோரும் பார்க்கப்போகிறோம்.

## ஒப்பற்ற மனிதர்

உயர்ந்த அலுவலராக, மக்கள் மனதில் நிற்கும் ஒப்பற்ற மனிதராக, செல்லுகிற இடங்களில் எல்லாம் நீங்கள் அந்த இடத்தை அடைவதற்கு முன் உங்கள் நற்பெயர் சென்று சேரக்கூடிய வகையில் நடந்து கொள்ள வேண்டும்.

## முதலிடம்

தமிழ்நாடு அனைத்துத் துறைகளிலும் முதலிடம் என்கிற இலக்கை எட்டும், அதுதான் என்னுடைய இலக்கு. அதற்காகத்தான் நான் நாள் பார்க்கவில்லை, நேரம் பார்க்கவில்லை, உழைத்துக் கொண்டே இருக்கிறேன்.

## நெஞ்சுறுதி

எத்தகைய சோதனைகளையும் வென்று சாதனை படைக்கக்கூடிய நெஞ்சுறுதியை மக்களாகிய நீங்கள்தான் எங்களுக்கு வழங்கிக் கொண்டு இருக்கிறீர்கள்.

## ஆட்சியின் இலக்கணம்

சரியான இலக்கை வைத்துத் தொடர்ச்சியாக உழைத்தால், தமிழ்நாடு இழந்த பெருமையை மீண்டும் அடையும் என்ற நம்பிக்கை எனக்கு உண்டு அதனை நோக்கித்தான் உழைத்துக் கொண்டு இருக்கிறோம், ஓடிக்கொண்டு இருக்கிறோம். சமூகம், கல்வி, பொருளாதாரம், தொழில் வளர்ச்சி, தொழில்நுட்ப வளர்ச்சி ஆகிய அனைத்திலும் ஒருசேர வளர வேண்டும் என்பதுதான் எங்களது ஆட்சியின் இலக்கணம் ஆகும்.

## மகத்தான பணி

சுவர் இருந்தால்தான் சித்திரம் என்பதைப் போல, மக்கள் இல்லாமல் அரசோ ஆட்சியோ இயங்கிட முடியாது. மக்களைக் காப்பதுதான் ஒரு அரசாங்கத்தினுடைய மகத்தான பணி. அதில் இந்த அரசு மாபெரும் வெற்றியைப் பெற்றுள்ளது.

## இலங்கைத் தமிழர்கள்

ஒரு ஜன்னல் மூடினால் மற்றொரு ஜன்னல் திறக்கும் என்று சொல்வார்கள், ஒரு ஜன்னல் மூடினாலும் இன்னொரு ஜன்னல் திறந்துள்ளது. இலங்கைத் தமிழர்களுக்காகத் திராவிட முன்னேற்றக் கழக அரசு தனது கதவைத் திறந்து வைத்திருக்கிறது. எனவே, என்றைக்கும் இந்த அரசு உங்களுக்குத் துணை நிற்கும்.

## தனிமனித கோரிக்கை

மிகப்பெரிய திட்டங்களை, பலகோடி மதிப்பிலான திட்டங்களை நாங்கள் போட்டாலும், ஒவ்வொரு தனிமனிதரின் கோரிக்கையையும் கேட்டு நிறைவேற்றுவதுதான் முக்கியம். தமிழ்நாட்டில் வாழும் ஒவ்வொரு மனிதனின் கவலையையும் தீர்க்கும் அரசாகத் திராவிட முன்னேற்றக்கழக அரசு இருக்கும்.



## உண்மையான வளர்ச்சி

மக்களும் வளர வேண்டும், தொழில் நிறுவனங்களும் வளர வேண்டும், அரசும் வளர வேண்டும். அதுதான் உண்மையான வளர்ச்சி. இதில் எது ஒன்று தேய்ந்தாலும் அது வளர்ச்சி ஆகாது.



## நம்பிக்கை

உங்களுக்காக உழைக்கக் காத்திருக்கிறோம், எங்களுக்கு நீங்கள் உத்தரவிடுங்கள், அதை முடிக்கத் தயாராக இருக்கிறோம். எங்கள் மீது நம்பிக்கை வைத்து நீங்கள் வாக்களித்தீர்கள். வாக்களித்த மக்களுக்கு மனசாட்சிக்கு விரோதம் இல்லாமல் பணியாற்றிக் கொண்டிருக்கிறோம்.



## தமிழ் இனம்

தமிழகத் தமிழர்களும், இலங்கைத் தமிழர்களும் இனத்தால், மொழியால், பண்பாட்டால், நாகரிகத்தால் ஒன்றுபட்டவர்கள். இன்னும் மகிழ்ச்சியாக, பெருமையாக, பூரிப்பாகச் சொல்ல வேண்டுமென்றால், நாம் அனைவரும் தமிழ் இனத்தைச் சார்ந்தவர்கள். கடல்தான் நம்மைப் பிரிக்கிறது. நீங்கள் விட்ட கண்ணீர் நம்மை இன்றைக்கு இணைத்துக் கொண்டிருக்கிறது.





## இலக்கு

**என்னுடைய இலக்குக்கு
திராவிட மாடல் என்று பெயர்,
அந்த இலக்கை அடைய
தந்தை பெரியாரின்
கொள்கை வலிமையும்,
பேரறிஞர் அண்ணாவின்
மானுடப்பற்றும்,
முத்தமிழறிஞர் தலைவர்
கலைஞரின் விடாமுயற்சியும்,
இனமானப் பேராசிரியரின்
பொறுமையும் கொண்டு
நான் எந்நாளும் உழைப்பேன்.
தமிழ்நாட்டைக் காப்பேன்.**

## திராவிட மாடல் அரசு

கலைஞர் அவர்களிடம், ஸ்டாலினைப் பற்றி ஏதாவது ஒரு வார்த்தைச்
சொல்லுங்கள் என்று பத்திரிகையாளர்கள் கேட்டபோது,
ஒரே வரியில் சொன்னார்.
உழைப்பு. உழைப்பு, உழைப்பு என்று சொன்னார்.
அந்த உழைப்பு எனக்கு மட்டுமல்ல, என்னோடு இணைந்து பணியாற்றிக்
கொண்டிருக்கக்கூடிய அமைச்சர்களாக இருந்தாலும் சரி,
சட்டமன்ற உறுப்பினர்களாக இருந்தாலும் சரி,
நாடாளுமன்ற உறுப்பினர்களாக இருந்தாலும் சரி, மேயர்களாக இருந்தாலும் சரி,
மாநகராட்சி உறுப்பினர்களாக இருந்தாலும் சரி,
எந்தப் பொறுப்பில் அவர்கள் தங்களை ஒப்படைத்துக் கொண்டிருந்தாலும்
அந்தப் பொறுப்பை உணர்ந்து பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள்.
அதுதான் திராவிட மாடல் அரசு.




தமிழ்
தமிழால் இணைவோம்!
தமிழை வளர்ப்போம்!
தமிழரை வளர்ப்போம்!